ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2085/20 - 2018 අගෝස්තු මස 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.08.23

*2085/20 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டம்***

*ச. வ. பி. 15/2014*

*இரண்டாயிரத்துப்பதினான்காம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 58ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 38 ஆம் பிரிவின்கீழ் வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*சஜித் பிரேமதாச,*
*வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை,*
*அமைச்சர்.*

கொழும்பு,
*2018, ஓகத்து 22.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2018 ஆம் ஆண்டின் நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலைக்கான நடவடிக்கை முறைகளும் தராதரங்களும் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இரண்டாயிரத்துப் பதினான்காம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு ஒப்பந்தக்காரரும் முறையே முதலாம் மற்றும் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான நடவடிக்கை முறைகளுக்கும் தராதரங்களுக்கும் அமைய சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஏதேனும் அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலையினை நிறைவேற்றுதல் வேண்டும்.

3. இவ்வொழுங்குவிதிகளில் –
“அடையாளங்காணப்பட்ட நிர்மாண வேலை” ஆனது 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்தி சட்டத்தில் உள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.


1A - PG 4180 - 507 (2018/08)



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**முதலாம் அட்டவணை**

அடையாளங்காணப்பட்ட நிர்மாண வேலைகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைமுறை

1. நிர்மாணவேலை ஒவ்வொன்றும் ஒப்பந்தத்தின் ஏற்புடையற்பாலதான நிபந்தனைகளிலும் இரண்டாம் அட்டவணையில் நிரற்படுத்தப்பட்ட அளவுக்கு குறிப்பீடுகளிலும் குறித்துரைக்கப்பட்ட தேவைப்படுத்தப்படும் தரம் மற்றும் வேலைப்பாடு என்பவற்றுடன் இசைந்தொழுக நிறைவேற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிபந்தனை அல்லது அளவுக் குறிப்பீடு எதுவும் நிரற்படுத்தப்படாதிருக்குமிடத்து, நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தத்தின் சர்வதேச ரீதியான ஏற்றுக்கொள்ளப்பட்ட இயைபான நிபந்தனைகள் மற்றும் அளவுக் குறிப்பீடுகள் என்பவற்றிற்கு இசைந்தொழுகுதல் வேண்டும்.

2. நிரந்தரமான வேலைகளில் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் பொருள் அல்லது நிறுவப்பட்ட பொறித்தொகுதி என்பன பதிவு செய்யப்பட்ட இறக்குமதியாளர் ஒருவரால், வழங்குநர் ஒருவரால் அல்லது உற்பத்தியாளர் ஒருவரால் வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பொருள் மற்றும் பொறித்தொகுதி தேவைப்படும் அளவுக்குறிப்பீடுகளுடன் இசைந்தொழுகுதல் வேண்டும்.

3. ஏதேனும் அடையாளங்காணப்பட்ட நிர்மாண வேலையை நிறைவேற்றும் அதேநேரம் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார அக்கறைகளை பாதுகாப்பதற்கு பொதுவான வழிமுறைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

4. அமைவிடத்தில் அல்லது அமைவிடத்திற்கு வெளியே சூழலைப்பதுகாப்பதற்கும் தீழ்ப்பு, சத்தம் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாக ஆட்களிற்கு அல்லது ஏதேனும் அருகிலுள்ள ஆதனத்திற்கு விளைவிக்கப்பட்ட ஏதேனும் சேதத்தை அல்லது தொல்லையை தடுப்பதற்கும் போதுமானதும் நியாயமானதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

5. எல்லா நிர்மாண செயற்பாடுகள் தொடர்பாக பேரழிவு மீள்எழுச்சி வழிமுறைகளை பின்பற்றுவதற்கு போதுமானதும் நியாயமானதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

**இரண்டாம் அட்டவணை**

அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலைகளை நிறைவேற்றுவதற்கான நியமங்கள்

1. CIDA/ SBD/ 01 – நியம விலைகூறல் ஆவணம் – வேலைகளின் பெறுகை.
2. CIDA/ SBD/ 02 – நியம விலைகூறல் ஆவணம் – பாரிய ஒப்பந்தங்கள்.
3. CIDA/ SBD/ 03 – நியம விலைகூறல் ஆவணம் – சிறிய ஒப்பந்தங்கள்.
4. CIDA/ SBD/ 04 – நியம விலைகூறல் ஆவணம் – வடிவமைப்பு மற்றும் கட்டிடம் அமைத்தல் ஒப்பந்தங்கள்.
5. CIDA/ ID/ 11 – கட்டிடங்களின் அத்திவாரத்திற்கான அமைவிட நுண்ணாய்வுக்கான வழிகாட்டு நெறிகள்.
6. CIDA/ DEV/ 14 – தீ ஒழுங்குவிதிகள்.
7. CIDA/ DEV/ 15 – முன்னிருந்த இடத்தில் வலுவூட்டப்பட்ட கொங்கிறீட் அடுக்குகளிலுள்ள மென்மரத்தகடு மற்றும் வாரிரும்பு வடிவமைப்புக்கான தனி அடுக்குகளின் கொண்டுசெல்லும் ஆற்றலை மதிப்பீடு செய்வதற்கு அமைவிட நுண்ணாய்வுத் தரவினை பொருள்கோடல் செய்வதற்கான வழிகாட்டு நெறிகள்.
8. CIDA/ DEV/ 20 – பல்மாடிக் கட்டிடங்களில் உள்ளக நிறுவுகைகளுக்கான வழிகாட்டு நெறிகள் (குழாய்கள், வடங்கள் முதலியன).
9. CIDA/ CM/ 01 – பயனுறுதிவாய்ந்த நிர்மாண முகாமைக்கான வழிகாட்டு நெறிகள்.
10. CIDA/ SP/ 102 – நிர்ப்பாசன மற்றும் நில வடிகாலமைப்புக்கான அளவுக்குறிப்பீடுகள்.
11. SCA/ 3/ 2 – நீர்வழங்கல் கழிவுநீர் மற்றும் புயலினாலான நீர் வடிகாலமைப்புக்கான அளவுக்குறிப்பீடுகள்.
12. SCA/ 3/ 3 – காணிமீட்பு வேலைகளுக்கான அளவுக்குறிப்பீடுகள்.
13. SCA/ 3/ 4 – நிலக்கீழ் நிரைத்தேடிக் கண்டத்தில் மற்றும் தேடிப்பயன்படுத்துதலுக்கான அளவுக் குறிப்பீடுகள்.
14. SCA/ 4/ 1 – கட்டிட வேலைகளுக்கான அளவுக்குறிப்பீடுகள் (தொகுதி I).
15. SCA/ 4/ 11 – கட்டிட வேலைகளுக்கான அளவுக்குறிப்பீடுகள் (தொகுதி II).
16. SCA/5 – நிர்மாண, வீதிகள் மற்றும் பாலங்களைப் பேணுதல் என்பவற்றுக்கான நியம அளவுக் குறிப்பீடுகள்.
17. SCA/ 6 – கரையோர மற்றும் துறைமுக பொறியியல் வேலைகளுக்கான அளவுக்குறிப்பீடுகள்.
18. SCA/ 7 – தரைத்தோற்ற வேலைகளுக்கான அளவுக்குறிப்பீடுகள் (தொகுதி I).
19. SCA/ 8 – மின்சார மற்றும் பொறிமுறை வேலைகளுக்கான அளவுக்குறிப்பீடுகள்.

20. SCA/ 9 - தீயைக் கண்டுபிடித்தல், பாதுகாத்தல் மற்றும் அடக்குதல் முறைமைகளுக்கான அளவுக்குறிப்பீடுகள்.

21. CIDA/ SP/ 101 - முன்னிருந்த இடத்தில் வலுவூட்டப்பட்ட கொன்கிறீட் அடுக்குகளிலுள்ள மென்மரத்தகடு மற்றும் வாரிரும்புக்கான அளவுக்குறிப்பீடுகள்.

22. CIDA/ DEV/ 17 - கட்டிட வேலைகள் மற்றும் கணியங்களின் மாதிரிப்பட்டியலுக்கான அமைவிட நுண்ணாய்வுக்கான அளவுக்குறிப்பீடுகள்.

9 - 131

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.